**தேசிய விளையாட்டு நிதியம் - 2022**

---------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள

### 1.1 அபிப்பிராயம்

தேசிய விளையாட்டு நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

தேசிய விளையாட்டு நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும்.

எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1973 இன் 25 ஆம் இலக்க விளையாட்டு சட்டத்தின் 25(2) ஆம் பிரிவு | 2022 ஆம் ஆண்டிற்காக நிதியத்தின் நிர்வாகம் தொடர்பான அறிக்கையொன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | 2023 ஆகஸ்ட் 18 ஆம் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிர்வாகம் தொடர்பான அறிக்கையொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |

| | | | |
|---|---|---|---|
| நிதிப் பிரமாணம் 877(1)(இ) மற்றும் (ஈ) | 2022 ஆம் ஆண்டில் தேசிய விளையாட்டு நிதிய பாதீட்டிற்காக திறைசேரி அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | வரவு செலவுத்திட்ட பணிப்பாளர் நாயகத்திற்கு மற்றும் அரச நிதி நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதியத்தின் பாதீட்டிற்காக திறைசேரி அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |
| நிதிப் பிரமாணம் 877(2)(ஈ) பந்தி | மீளாய்வாண்டிற்காக தேசிய விளையாட்டு நிதியத்தின் செயலாற்றல் அறிக்கையொன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு துரிதமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயலாற்றல் அறிக்கையொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 193,190,265 மிகையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 12,466,602 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 180,723,663 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு நிதியத்தின் வருமானம் ரூபா 187,652,998 அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வீரர்களின் ஊட்டச்சத்து கொடுப்பனவுகளுக்காக 2022 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ரூபா 10,000,000 ஒதுக்கப்பட்டு திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அது ரூபா 2,650,000 ஆக குறைக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டில் இதற்காக செலவிடப்பட்ட உண்மையான செலவு ரூபா 2,601,004 ஆக இருந்ததுடன் இதில் ரூபா 1,191,004 | விளையாட்டு நிதியம் ஈடுபடுத்தப்பட வேண்டிய பணிகளுக்கு இடையே விளையாட்டு வீர வீராங்கனைகளின் ஊட்டச்சத்து நிலையை உயர்த்துதல் பிரதான பணியாக விஷேடமாக உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. நிதியத்தின் பணத்தின் அளவை கருத்தில் கொண்டு அனுசரணைகளும், வீரர்களின் போஷாக்கு நிலை தொடர்பாக | விளையாட்டு வீரர்களின் செயலாற்றலை மேம்படுத்துவதற்காக ஊட்டச்சத்து நிலையை உயர்த்துதல் தொடர்பாக போதியளவான கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வெளிநாட்டு பயிற்சி பெற்ற இரண்டு விளையாட்டு வீரர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படுகின்ற கொடுப்பனவு மற்றும் ரூபா 1,410,000 உயர் செயல்திறன் வேலைத்திட்டத்தின் கீழ் அனுசரணை செய்யப்பட்ட விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும் ஊட்டச்சத்து கொடுப்பனவாகும்.2021 ஆம் ஆண்டில் செலவழிக்கப்பட்ட ரூபா 8,215,107 ஆன செலவுடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டின் செலவு 68 சதவீதத்தால் குறைந்துள்ளது. அதன்படி, கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் மிகை அதிகரித்திருந்தபோதிலும், வீரர்களின் ஊட்டச்சத்து நிலையை உயர்த்துவதற்கு போதுமானளவு கவனம் செலுத்தப்படவில்லை. | விளையாட்டுத் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் மிகத்திறமையான விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு போஷாக்கு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. | |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டின் ஆரம்ப வரவுசெலவுத்திட்டத்தின்படி, ரூபா 4,600,000 ஆன பயிற்சியாளர்களுக்கான நலன்புரி கொடுப்பனவுகள் திருத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் குறைக்கப்பட்டிருந்ததுடன் இதன் பிரகாரம் வீரர்களின் செயல்திறனை நேரடியாக பாதிக்கும் பயிற்சியாளர்களின் ஆர்வத்தை உயர்த்துவதில் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை. | விளையாட்டுத்துறையின் வளர்ச்சிக்காக விளையாட்டு சட்டத்தின் விதிகளின்படி அமைச்சருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரம் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பரிந்துரையை கருத்தில் கொண்டு அமைச்சரின் அங்கீகாரத்திற்கு அமைய பணம் செலுத்தப்பட்டுள்ளது. | விளையாட்டின் அபிவிருத்தியில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (இ) | விளையாட்டுத் திறன்களை மேம்படுத்தும் நோக்கில் நிதியத்தின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், 2022 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் வீரர்கள், பயிற்சியாளர்கள் | வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்களின் திறன் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக இந்த செலவு விடயத்தின் கீழ் பணம் செலுத்தப்பட்டதுடன் அத்திட்டங்கள் நடாத்தப்படல் மட்டுப்படுத்தப்பட்டமை | விளையாட்டு திறன்களை மேம்படுததுவதற்கு விளையாட்டு நிதியத்தைப் பயன்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் அதிகாரிகளின் திறன் மேம்பாட்டுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 21,500,000 ஒதுக்கீடொன்று திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் ரூபா 300,000 வரை 98.6 சதவீதத்தால் குறைக்கப்பட்டிருந்தது.. | மற்றும் எதிர்பார்த்தபடி வருமானம் சேகரிக்கப்படாத காரணத்தால் வரவு செலவுத் திட்டம் திருத்தப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (ஈ) | விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் 66 தேசிய விளையாட்டுகள் பதிவு செய்யப்பட்டிருந்தாலும், 2022 ஆம் ஆண்டில், தேசிய விளையாட்டு நிதியத்தினால் ரூபா 167,437,307 ஆன பண அனுசரணையொன்று வழங்கப்பட்டிருந்தது. அந்த மதிப்பில் ரூபா 38,388,967 அதாவது 23 சதவீதம் தடகள விளையாட்டிற்காகவும், ரூபா 32,918,499 அதாவது 19.6 சதவீதம் நெட்பால் விளையாட்டிற்காகவும், ரூபா 15,000,000 அதாவது 8.9 சதவீதம் ரக்பி விளையாட்டிற்காகவும் செலவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் செலவிடப்பட்ட தொகையில் 51.5 சதவீதம் 03 தேசிய விளையாட்டுக்களுக்காக மட்டுமே செலவிடப்பட்டுள்ளது. 66 தேசிய விளையாட்டுக்கள் இருந்தாலும், தேசிய விளையாட்டு நிதியம் 21 தேசிய விளையாட்டுகளுக்கு மட்டுமே நிதியுதவி வழங்குவதால் தேசிய விளையாட்டுகளின் ஊக்குவிப்பு மற்றும் அபிவிருத்தியில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை. | ஏனைய சங்கங்கள்/சம்மேளனங்கள் மற்றும் விளையாட்டு வீரர்களை ஸ்தாபிப்பதற்கு விளையாட்டுத்துறை அமைச்சரின் அதிகாரத்தின்படி அவ்வப்போது நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.. | ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கையின்படி, தேசிய விளையாட்டுகளின் ஊக்குவிப்பு மற்றும் அபிவிருத்தியில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டு நடவடிக்கைகளை நிறுவுவதற்கு விசேட கவனம் செலுத்தப்படாததுடன் ஒரு மாவட்டத்தில் 3 பாடசாலைகளுக்கு மாத்திரம் ரூபா 300,000 செலவிடப்பட்டிருந்தது. | தேசிய விளையாட்டு நிதியத்தினால் பாடசாலை மட்டத்திலிருந்து விளையாட்டை மேம்படுத்துவதற்கு அவ்வப்போது நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. | பாடசாலை மட்டத்திலிருந்து விளையாட்டை மேம்படுத்துவதற்கு முறையான செயல்முறையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேய்டும் |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொது நலவாய மற்றும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளை இலக்காகக் கொண்ட உயர் செயல்திறன் வேலைத்திட்டத்தின் கீழ், வீரர்களின் திறன்களை வளர்த்து, அந்தந்த போட்டிகளில் வெற்றிபெறும் நம்பிக்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட விளையாட்டுகளுக்கு அனுசரணைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் நீச்சல், ஜிம்னாஸ்டிக்ஸ், ஸ்குவாஷ், டேபிள் டென்னிஸ், கூடைப்பந்து, பீச் வாலிபால் , கிரிக்கெட் (பெண்கள்), ரக்பி மற்றும் மல்யுத்தம் ஆகிய 9 விளையாட்டுகளுக்கு இந்த திட்டத்தின் கீழ் அனுசரணைகள் பெறப்படவில்லை. இதன்படி, பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளை பிரதிநிதித்துவப்படுத்திய 116 தடகள வீரர்கள் 78 பேருக்க்கு அதாவது 67 சதவீதமானவர்களுக்கு இந்த திட்டத்தின் கீழ் அனுசரணை வழங்கப்படவில்லை. | விளையாட்டு மன்றங்கள் முறையாக வழங்கும் முடிவுகளின் அடிப்படையில் தற்போது கொடுப்பனவு செய்யப்படுகின்றது. | முறையான அங்கீகரிக்கப்பட்ட முறைப்படி விளையாட்டு வீரர்களின் அனுசரணைகள் வழங்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் பெண்களுக்கான 57 கிலோகிராம் எடைப் பிரிவில் இலங்கைக்காக வெண்கலப் பதக்கத்தை வென்ற மல்யுத்தம், உயர் செயல்திறன் வேலைத்திட்டத்தின் கீழ் கொடுப்பனவு வழங்குவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட விளையாட்டுப் போட்டியொன்றாக இல்லாததால், இலங்கைக்காக வெண்கலப் பதக்கத்தை வென்ற விளையாட்டு வீராங்கனைக்கு மேற்படி வேலைத்திட்டத்தின் கீழ் கிடைக்க வேண்டிய கொடுப்பனவு மற்றும் மாதாந்த ஊட்டச்சத்து கொடுப்பனவு இழக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

## 3.3 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாத்தறை கும்புறுப்பிட்டி பொக்ஸிங் விளையாட்டு அரங்கிக்காக கட்டிடமொன்றை அமைத்தல் மற்றும் கும்புறுப்பிட்டி கரப்பந்தாட்ட விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்காக தேசிய விளையாட்டு நிதியத்தின் மூலம் மாத்தறை மாவட்ட செயலகத்திற்கு ரூபா 9.157,992 வழங்கப்பட்டிருந்ததுடன், மொத்த ஒப்பந்த செலவினம் ரூபா 7,265,483 ஆனமையால் மிகுதி தொகையான ரூபா 1,892,509 ஆனது 2022 சனவரி முதல் 2023 யூலை வரையான ஒரு வருடம் மற்றும் ஆறு மாத காலப்பகுதிக்குள் பொது வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டபோதிலும் அத்தொகையை தேசிய விளையாட்டு நிதியத்திற்கு மீளப்பெற்றுக்கொள்வதற்கு அல்லது வேறு அபிவிருத்தி பணிகளுக்கு பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இத்தொகை உடனடியாக நிதியத்திற்கு செலவு வைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஏனைய அரச நிறுவனங்களின் மூலம் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது வழங்கப்படுகின்ற நிதிஏற்பாடு தொடர்பாக முறையான மற்றும் போதியளவு பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட வேண்டும். |